**MLWA HSS (Run by Jain Educational & Empowerment Trust) Madurai**

**+2 Com Model Hly 2022**

Date : 03-Dec-22

12th Standard

வணிகவியல்

Reg.No. : | | | | | |

**Prepared by M.MuthuSelvam Cell No: 9842104826**

Exam Time : 03:00:00 Hrs

Total Marks 90

**பகுதி அ - சரியான விடையை தேர்ந்தெடு** 16 x 1 = 16

1) வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பபதை ______ என்பர்.
(a) ஒழுங்கு (b) பயன்பாடு (c) வேலைபபகிர்வு (d) சமத்துவம்

2) ஒரு இரண்டாம் நிலைச் சந்தையில ஒரு பத்திரம் எத்தனை முறை விற்கப்படலாம்?
(a) ஒரே ஒரு முறை (b) இரணடு முறை (c) மூன்று முறை (d) பல முறை

3) நம்பிக்கையுள்ள வணிகர என்பவர்
(a) காளை (b) கரடி (c) மான் (d) வாத்து

4) மனித வள மேலாண்மை ___________ உறவினை நிர்ணயிக்கிறது.
(a) அக, புற (b) முதலாளி, தொழிலாளி (c) உரிமையாளர், வேலைக்காரன் (d) முதல்வர், முகவர்

5) உடனடி சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.
(a) பொருட்கள் (b) பரிவர்த்தனை (c) ஒழுங்குமுறை (d) காலம்

6) நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
(a) மகாத்மா காந்தி (b) ஜான் எப்.கென்னடி (c) ரால்ப் நேடர் (d) ஜவஹர்லால் நேரு

7) மாவட்ட மன்றத்தின் தலைவர் யார்?
(a) மாவட்ட நீதிபதி (b) உயர் நீதிமன்ற நீதிபதி (c) உச்ச நீதிமன்ற நீதிபதி
(d) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

8) பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைகள் துவங்க அனுமதிபபது _______ ஆகும்.
(a) தாராளமயமாக்கல் (b) தனியார்மயமாக்கல் (c) உலகமயமாக்கல் (d) பொது நிறுவனம்

9) சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
(a) 1940 (b) 1997 (c) 1930 (d) 1960

10) மாற்றுச்சீட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் எத்தனை பேர்?
(a) 2 (b) 6 (c) 3 (d) 4

11) தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது?
(a) இடர்தாஙகி (b) புதிமைபடைப்பவர் (c) ஊழியர் (d) அமைபபாளர்

12) வணிக தொழில் முனைவோரைச் சாராத பணியைக் கண்டறி.
(a) விறபனை (b) கழிவு (c) வாங்கல் (d) தயாரிப்பு

13) அனைத்து இந்திய அரசாங்கங்களும் மின்னணு முறையில கிடைக்கச் செய்ய, இந்திய பொருளாதாரத்தை நவீனமயமாக்க ______ முன் முயற்சி தொடங்கப்பட்டது
(a) ஸ்டாண்ட் அப் இந்தியா (b) ஸ்டார்ட்டப இநதியா (c) டிஜிட்டல் இந்தியா
(d) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்

14) புதிது புனைதல் மற்றும் தொழில முனைவோர் கலாச்சாரத்தை ஊக்குவிக்க இந்திய அரசு ____ __ முயறசிககிறது.
(a) அடல் புதுமை புகுத்தல் திட்டம (b) பெண்களுக்கு பயிறசி மறறும் வேலைவாய்ப்பு திட்டததிற்கான ஆதரவு.
(c) விஞ்ஞான அடிப்படையில அதிகாரமளித்தல் மற்றும் அபிவிருத்தி (d) அடல் இனபுவேஷன் சென்டர்ஸ்

15) ஒரு நிறுமம் தனது பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம் பற்றிய அறிக்கையை ______ நாட்களுக்குள் நிறுமப் பதிவாளருக்கு தெரிவிக்க வேண்டும்.
(a) 14 நாட்கள் (b) 21 நாட்கள் (c) 30 நாட்கள் (d) 60 நாட்கள்

16) _______ கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கூட்டப்படும்
(a) சட்டமுறை (b) ஆண்டுப்பொது (c) சிறப்பு (d) வகுப்பு

**பகுதி அ - கூறறு மற்றும் காரணம்** 1 x 1 = 1

17) உறுதிப்படுத்துதல் (A): காளையின் கொம்புகள் மேல் நோக்கி இருக்கும தன்னுடைய எதிரிகளை கொம்புகளால் மேல்நோக்கி தூக்கி எரியும்
காரணம் (R): காளை ஊக வணிகர் பகுதிகளின் விலை உயரச செய்யும் நோக்கோடு செயல்படுவர்
அ) (A) மற்றும் (R) சரியானது (R),(A) ஐ விளக்குகிறது
ஆ) (A) மற்றும் (R) சரியானது, (R), (A) ஐ விளக கிறது
இ) (A) சரியானது ஆனால் (R) தவறானது
ஈ) (A) மற்றும் (R) தவறானது

**பகுதி அ - பொருந்தாத ஒன்றை காணக** 1 x 1 = 1

18) அ. பொருள்
ஆ. தரவு
இ. விளம்பரம்
ஈ. விலை

**பகுதி அ - பொருந்தும் இணையை காண்க** 1 x 1 = 1

19) அ) வளாக தேர்வு -அலுவலகஙகள்
ஆ) பதவி உயர்வு - பணி முட்பு
இ) சட்ட வாரிசு - பணியாளருக்கு சம்பந்தம் அல்லாதவர்
ஈ) பதவி இறக்கம் - மேல்மட்டம் நோக்கி

**பகுதி அ - தவறான இணையை காண்க** 1 x 1 = 1

20) அ) கடன் சந்தை - அரசுப் பத்திரங்கள்
ஆ) பணச்சந்தை - கருவூலச் சீட்டு
இ) மூலதனச் சந்தை - பங்குகள்
ஈ) எதிர்கால சந்தை - உடனடிச் சந்தை

**பகுதி ஆ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாயம்** 7 x 2 = 14

21) மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
22) கடன் சந்தை என்றா என்ன?
23) செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக
24) ஆட்சேர்ப்பு முறையில் வே ட்டையாடுதல் என்றால் என்ன ?
25) சந்தையிடுகையாளர் வரைவிலக்கணம் தருக.
26) VUCA -ஐ விரிவாக்கம் தருக.
27) மாற்றுமுறை ஆவணம் என்றால் என்ன?
28) ஏதேனும் நான்கு அரசின் தொழில் முனைவோர் திட்டங்களின் பெயர்களை எழுதுக.
29) "பகராள்" சிறு குறிப்பு வரைக.
30) நிறும செயலர் வரைவிலக்கணம் தருக.

**பகுதி இ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாயம்** 7 x 3 = 21

31) மேலாண்மை வரைவிலக்கணம் தருக.

32) இரண்டாம் நிலைச்சந்தை - சிறு குறிப்பு வரைக.
33) புறத்தோற்றமற்ற பத்திர கணக்கிற்கு தேவைப்படும் ஆவணங்களை கூறுக.
34) பயிற்சி அளிப்பவர் மற்றும் பயிற்சி பெறுபவர் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
35) தனியிடச்சந்தை பற்றி விளக்குக
36) ஆரோககியம மற்றும் பாதுகாப்பு தொடர்பான பாதுகாப்பு உரிமைகள் பற்றி நீவீர் அறிவது என்ன?
37) தார  எமயமாக்கல் என்றால் என்ன?
38) தொழில் முனைவோர் மற்றும் மேலாளர் இவர்களை வேறுபடுததி காட்டுக.
39) பங்குகளை முனைமத்தில் வெளியிடல் என்பது குறித்து நீவிர் அறிவது யாது?
40) சிறப்பு தீர்மானம் என்றால் என்ன?

**பகுதி ஈ - அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a) விதிவிலக்கு மேலாண்மையின் குறைபாடுகள் பற்றி விவாதிக்க.

**(OR)**

b) வியாபாரத்தின் நுண்ண ய சூழல் காரணிகளை விளக்கு.

42) a) பணச்சந்தை மறறும மூலதனச்சந்தை வரைவிலக்கணம் தருக. இவை இரண்டிறகும இடையிலான வேறுபாடுகளை விவரி.

**(OR)**

b) பங்குச் சந்தை - பொருட்கள் பரிமாற்றகம் வேறுபாடு காண்.

43) a) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அகவளங்களை விளக்குக.(ஏதேனும் 5)

**(OR)**

b) இந்திய பெருளாதாரத்தில் எல்பிஜி (LPG)யின் தாக்கத்தை விளக்குக.

44) a) சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக.

**(OR)**

b) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவரி.

45) a) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?

**(OR)**

b) வியாபார அடிப்படையிலான தொழில் முனைவு வகைப்பாட்டினை விவரித்து எழுதுக

46) a) மாநில ஆணையத்தின் ஒட்டுமொத்த செயல்திறனை விளக்குக.

**(OR)**

b) இயக்குனரின் தகுதிகள் பற்றி கூறுக.

47) a) நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக.

**(OR)**

b) பலவகையான திறந்த மற்றும் இரகசிய வகையில் செய்யப்படும் வாக்கெடுப்பு முறைகளை விளக்குக.

**தனித்து போராடி கரைசேர்ந்த பின் ...**
**திமிராய் இருப்பதில் தப்பில்லையே ...**

**************************** ************

**MLWA HSS (Run by Jain Educational & Empowerment Trust) Madurai**

**+2 Com Model Hly 2022**

Date : 23-Nov-22

12th Standard

Reg.No. :

**வணிகவியல்**

**Prepared by M.MuthuSelvam Cell No: 9842104826**

Time : 03:00:00 Hrs

Total Marks : 90

**பகுதி அ - சரியான விடையை தேர்ந்தெடு** 16 x 1 = 16

1) (c) வேலைப்பகிர்வு

2) (d) பல முறை

3) (a) காளை

4) (b) முதலாளி, தொழிலாளி

5) (b) பரிவர்த்தனை

6) (c) ரால்ப் நேடர்

7) (a) மாவட்ட நீதிபதி

8) (b) தனியார்மயமாக்கல்

9) (c) 1930

10) (c) 3

11) (b) புதிமைபடைபபவர்

12) (a) விற்பனை

13) (c) டிஜிட்டல் இந்தியா

14) (a) அடல் புதுமை புகுத்தல் திட்டம்

15) (c) 30 நாட்கள்

16) (a) சட்டமுறை

**பகுதி அ - கூற்று மற்றும் காரணம்** 1 x 1 = 1

17) அ) (A) மற்றும் (R) சரியானது (R),(A) ஐ விளக்குகிறது

**பகுதி அ - பொருந்தாத ஒன்றை காண்க** 1 x 1 = 1

18) ஆ. தரவு

**பகுதி அ - பொருந்தும் இணையை காண்க** 1 x 1 = 1

19) பதவி உயர்வு - பணி முட்பு

**பகுதி அ - தவறான இணையை காண்க** 1 x 1 = 1

20) ஈ) எதிர்கால சந்தை - உடனடிச் சந்தை

**பகுதி ஆ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாயம்** 7 x 2 = 14

21) 1) கணக்கியல்
2) வணிகச்சட்டங்கள்
3) உளவியல்
4) புள்ளியியல்
5) பொருளியல்
6) தரவு செயலாக்கம்

22) கடன கருவிகளை வர்த்தகம் செய்வதற்கான நிதிச் சந்தை கடன் சநதை ஆகும். உதாரணம்: அரசு பத்திரங்கள் அல்லது பிணையங்கள், நிறும கடனீட்டு பத்திரங்கள போன்றவை.

23) 1. பங்கு மாற்றகத்தின் பணிகளை ஒழுங்குபபடுததுதல.
2. முதலீட்டாளர்களின் நலனை பாதுகாததல்
3. உள்வழி வணிகத்தை தடை செயத
4. பரஸ்பர நிதியகத்தின் செயல்பாடடை கண்காணித்தல்.

24) நிறுவனங்கள் தங்களது சொநத பணியாளர்களுக்கு சலுகைகள் வழங்காமல் போட்டி நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு ந தி மற்றும் சாராத சலுகைகளை வழங்கி அப்பணியாளர்களை கவரந்து பணியில் அமர்த்துவதே வேடடையாடுதல் ஆகும்.

25) பண்டங்கள் மற்றும் பணிகளை யார ஒருவர் குறிப்பாக விற்பனைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறாரோ அவரே சநதையிடுகையாளர் என அழைக்கப்படுகிறார்.

26) 1. ஏற்ற இறக்கம்
2. நிச்சயமற்றத் தன்மை
3. சிக்கலான தன்மை
4 தெளிவற்ற தன்மை
போனற வணிகத்தின் எதிர்கால சூழலை சுருக்கமாக கூறுவது.

27) (i) ஒரு குறிப்பிட்ட நபருக்கு குறிப்பிட்ட தொகையை உரிமை வழங்குவதற்கும்.
(ii) மேலெழுதல் அல்லது கையில் கொடுப்பதன் மூலம் நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு அதன் உரிமையை மாற்ற பொருத்தமான ஆவணம் மாற்றுமுறை ஆவணம் ஆகும்.

28) 1. ஸ்டாட்டப் இந்தியா (Start Up India)
2. இந்தியாவில் தயாரிப்பு திட்டம (Make In India)
3. அடல் புதுமை புகுத்தல திட்டம் (அடல் Innovtion Mission)
4.பெண்களுக்கான பயிறசி மறறும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு (STEP)
5.ஜன்தன் -ஆதார் மொபைல்

29) 1. ஒரு பொதுக்கூட்டத்தில் தனக்குப் பதில் கலந்து கொள்ள உறுப்பினர் ஒருவரால் நியமிக்கப்படும் நபர் பகராள் எனப்படுவார்.
2. பகராளை நியமிக்கும் பத்திரத்தை கூட பகராள் எனும் சொல் குறிக்கும்.

30) "ஒரு நிறுமத்தின் அமைச்சராக (அல்லது) நிர்வாக பணிகளை செய்து முடிக்க தேவையான அனைத்து தகுதிகளும் பெற்றுள்ள தனிநபர்". - **நிறும சட்டம் 2013 பிரிவு 2 (14)**

**பகுதி இ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாயம்** 7 x 3 = 21

31)

(i) "மேலாண்மை என்பது முன் கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது" - ஹென்றி ஃபோயல்
(ii) மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கிறது. மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும் மேலாண்மை செய்கிறது". - பீட்டர் F. டிரக்கர

32) (i) ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம நிலைச் சந்தை ஆகும்.
(ii) பங்கு மாற்றகம் இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.
(iii) இரண்டாம் நிலைச் சந்தையில் விலை தேவை மற்றும் அளிப்பைப் பொறுத்து நிர்ணயம் செய்யப்படுகிறது.

33) (i) பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் கணக்கு துவகக படிவத்துடன் அடையாள மற்றும் முகவரி சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.
(ii) ஆவணங்களின் நகல் பிரதிகளை ம டுமே சமர்ப்பிக்க வேண்டும்.
(iii) ஆனால் சரிபார்ப்புக்கு மூலச சான்றிதழ்கள் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

34) **பயிற்சி அளிப்பவர்:**
1. பணியாளருக்குத் திறன்களை போதித்து, பணியை சிறப்பாக செய்ய தயார் செயயும் ஒரு நபர் பயிற்சி அளிப்பவர் ஆவார
2. பயிற்சி அளிப்பவர் என்பவர் பயிற்சியாளர், ஆசிரியர் வழிகாட்டல், ஆலோசகர, ஆலோசகர் கையேடு, குரு, மேலாளர், கையாளுநர், ஆசிரியர் மற்றும் கல்வியாளர் போன்றோர் ஆவர்.
**பயிற்சி பெறுபவர்:**
1. ஒரு வேலையின் திறனை கற்றுக்கொள்ளும் நபரே பயிற்சி பெறுபவர் ஆவார்.
2. பயிற்சி பெறுபவர் மனிதவள மேண்மைத்துறை அல்லது மேற்பார்வையாளாரின் பரிந்துரையின் அடிப்படையிலும், தன்சுய ஆர்வத்தின் அடிப்படையிலும் பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுகிறார்.

35) 1. தனியிடச் சந்தை என்பது உண்மையில் ஒரு சந்தையே அல்ல.
2. இது போட்டியாளர்களால் அடையாளம் காணப்படாத ஒரு வரையறுக்கப்பட்ட வகுப்பு / பிரிவு மக்களை அடையாளம் கண்டு அந்த வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறது.
3. இது ஒரு பெரிய குளத்தில் ஒரு சிறிய மீனாக இருப்பதற்கு பதிலாக ஒரு சிறிய குளத்தி ஒரு பெரிய மீனாக இருப்பது போல, ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட வாடிக்கையாளரின் தேவைகளை பூரததி செய்யும் சந்தையாக செயல்படுகிறது.
4. உதாரணமாக, அனைத்து தொலைக்காட்சி சேனல்களிலும் சிறப்பாக ஸ்டார் ஸபோரடஸ, ஈ எஸ் பின், ஸ்டார் கிரிக்கெட் போன்ற விளையாட்டு சேனல்கள், வெறும் விளையாட்டு நிகழ்வுகளுககு மட்டும் உருவானவை.
5. இது விளையாட்டில் ஆர்வம் நிறைந்த வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்கின்றது.

36) 1. சில தயாரிப்பு பொருட்கள் நுகர்வோரின் உடல்நலம், சொத்துக்கள் மறறும் வாழ்வு முறையில் அபாயத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கலாம்.
2. இன்றைய சூழலில் சட்டத்திற்கு புறம்பான மற்றும் பாதுகாப்பில்லாத பெ ருட்களை தயாரிப்பதோ அல்லது விற்பனை செய்யவோ கூடாது என்ற கடமை விற்பனையாளருக்கும் மற்றும் உற்பத்தி செய்வோருக்கும் உள்ளது.

37) தாராளமயமாக்கல் என்பது பொருளாதாரத்தில் சந்தை நல்ல நிலையை அடைவதற்காக வணிக நடைமுறையில் அரசாங்கத்தின் கொள்கைகளான வரிவிதிப்பு. ஏற்றுமதி இறக்குமதி தீரவைகள, மானியங்கள் மற்றும் பிறக் கட்டுபபாடுகளை தளர்த்தும் நடவடிக்கை ஆகும்.

38)

| அடிபபடை | தொழில் முனைபவர் | மேலாளர் |
|---|---|---|
| நோக்கம் | அமைப்பினைத் தேர்ந்தெடுத்து தன்னுடைய வினையை துவக்குவது | துவக்கிய வினையில் செவவனே பணியாறறுவது. |
| தகுநிலை | தான் துவக்கிய அமைப்பின் உரிமையாளர். | ஊதியம் பெரும் உழைப்பாளி |
| இடர் ஏற்றல் | தான் துவங்கிய வினையினால ஏற்படும் இடர்கள் மறறும் நிச்சயமற்ற தனமையை தங்குவார் | வினையின இ ரில பங்கு பெறுவது இலலை |
| வெகுமதி | தன்னனுடைய இடர் ஏற்பிற்கு வெகுமதியாக இலாபத்தைப் பெறுகின்றார். | இலாபத்தில் பஙகு பெறுவது இல்லை. ஊதியம், படிகள், ஊக்க ஊதியம் பெறுபவர்கள் |
| ஆற்றல் | படைப்பாற்றல், உள்ளுணர்வு மற்றும் எதையாவது புதியதாக செய்ய வேண்டும் என்ற உந்துதல் பெற்றவர்கள் | நலல கோட்பாட்டு அறிவும், மன த உறவு திறனும் பெறறவர்களாக இருகக வேண்டும். |

39) (i) பஙகுகளின் வெளியீட்டு விலை முகமதிப்பை விட அதிகமாக இருநதால் பங்குகளை முனைமத்தில் வெளியிடுதல் என அழைக்கப்படுகிறது.
(எ.கா) Rs.10 மதிப்புள்ள பங்குகளை RS.12 க்கு வளியிடடால.
Rs. என்பது முனைத்தொகை
(ii) பங்குகள் மீது பெறப்படும் முனைமத் தொகையானது
"ஈடுகள் முனைமக் கணக்கு" எனற கணககிற்கு அனுப்பப்படும்.

40) 1. ஒரு முடிவிற்கு எதிராக வாக்களித்தவரகளின் எண்ணிக்கையை விட ஆதரவாக வாக்களித்தவரகளின எண்ணிக்கை 75 % (நானகில மூன்று பங்கு) மாக இருந்து ஒரு முடிவை நிறைவேற்றுவது சிறப்பு தீர்மானம்.
2. சிறப்பு பொருள் குறிதது நிறைவேற்றபபடும் தீர்மானம் சிறப்பு தீர்மானம் எனப்படும

**பகுதி ஈ - அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a)
1. மேலாளர்கள் மட்டுமே மிக முக்கியமான முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். இது கீழ்நிலை ஊழியர்களுக்கான உறசாகத்தை குறைக்கச் செய்கிறது.
2. இது பிரச்சனைகளை மேலாளர்களுக்குத் தெரிவிக்க கால நேரம் எடுத்துக் கொள்கிறது.
3 இயல்பான நடைமுறைகள ல் இருந்து விலகிச் செல்லும் ஊழியர்களை நிர்வகிப்பது கடினமாக கருதப்படுகிறது.
. சிக்கல்களைக் கருத்தில கொண்டு நிர்வகிக்கப்படுவதோடு வழககமான வரையறுக்கப்பட்ட வேலைக் கடமைகளுடன் தோல்வியின் புகாருக்குக் காரணமானவரகளைக் கண்டறிந்து இறுதியாக வேலை நீக்கம் செய்கிறது.

**(OR)**

b)

நுண்ணிய சூழல் காரணிகள்:
வியாபாரத்தின் செயல்திறனை உடனடியாக பாதிக்கும் சுற்றுச்சூழலாக இருக்கும் காரணிகள்.
i) நிதி அளிப்பவர்கள்:
கடனீட்டு பத்திரதாரர்கள், நிதிநிறுவனங்கள் ஆகியோரின் அணுகுமுறை உத்திகள் மற்றும் நிதிசாரா அமைபபுகளின் பங்கு போன்றவை முக்கியமாக உள்ளது.
ii) சரககு விற்பனையாளர்கள்:
1) விநியோகிப்பவர்களிடமிருந்து பெறப்படும் பொருட்கள் உற்பத்தியில் தொடர்ச்சியான செயல்பாட்டை ஏற்படுத்துகிறது.
2) சரக்கு விற்பனையாளரின் முக்கியத்துவத்தை ந றுவனங்கள் உணர்ந்துள்ளதால் அவர்களுடன் நல்ல உறவை வளர்க்க மற்றும் பராமரிக்க வேண்டும் என்று உணர்நதுஉள்ளனர்.
iii) சந்தையிடுகை இடைநிலையர்கள்
1) உற்பத்தி பொருளை விற்பனை செயயவும நுகர்வோரிடம் கொண்டு செல்லவும் விநியோகிப்பாளர் உதவி தேவை.
2) இவர்கள் நிறுவனத்தையும் நுகர்வோரையும் இணைக்கும் பாலமாக செயல்படுகின்றனர
iv) பொதுமக்கள்:
ஒரு வியாபாரத்தை உருவாக்குதல் மற்றும் அழித்தலுக்கான திறமை பொதுமக்களிடம உள்ளது.
v) வாடிக்கையாளர்கள்:
1) வாடிக்கையாளர்கள் மன்னர்களாக மதிக்கப்படுகிறார்கள்.
2) வியாபாரத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பவர்கள் இவர்களே.
vi) போட்டியாளர்கள்:
வணிக நிறுவனங்கள் போட்டியாளரை புரிந்து கொண்டு போட்டியிடும் போக்கில் அவர்களின் தொழில் யுக்திகளை மாற்ற வேண்டியது அவசியம்.

42) a)

**பணச்சந்தை:**
குரோத்தரின் கூற்றுப்படி, "பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் பணத்திற்கு நிகரான பல்வேறு ஆவணங்களை கையாளும் மொத்த அமைப்பிற்கான கூட்டுப் பெயராகும்".
**மூலதனச் சந்தை:**
அருண் கே. தாத்தா கூற்றுப்படி மூலதனச சநதை என்பது "பல்வேறு வகையான மூலதன ஆதாயங்களின தேவை மற்றும் அளிப்பிற்கு இடைய தோற்றுவிக்கப்பட்ட இணைப்புகளுடன் நிறுவன முதலீடுகள் மற்றும் செயல்பாடுகளின் ஒரு கலவையே" என வரையறுக்கிறார்.

| **வ.எண்** | **தன்மைகள்** | **பணச்சந்தை** | **மூலதனச் சந்தை** |
|---|---|---|---|
| 1 | நிதியின காலம் | ஒரு வருடத்திற்கும் மிகாமல் நடக்கும் குறுகிய கால சந்தை | ஒரு வருடத்திற்கும் மே ாக நடக்கும் நீண்ட கால சநதை |
| 2 | வணிக ஆவணங்கள் | மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச் சீட்டு, வணிகத்தாள் | பங்குகள், கடனீட்டுப பத்திரங்கள் அரசு பத்திரங்கள் |
| 3 | ஆவணங்கள் கிடைக்கும் இடம் | பொதுவாக இரண்டாம் நிலைச் சந்தையில் இடம் பெறாது. | இரண்டாம் நிலைச் சந்தையில் இடம் பெறும் |
| 4 | உட்பிரிவு | உட்பிரிவு எதுவும் இல்லை. | முதல் நிலைச சநதை மற்றும் இரண்டாம நிலைச் சந்தை என இரணடு பிர வுகள் உள்ளன. |
| 5 | பரிவர்த்தனை நடைபெறும் இடம் | முறையான இடம் ஏதும் இல்லாமல் தொலைபேசி வழியாக பரிவர்த்தனை நடைபெறும் | முறையான இடத்தில பரிவர்ததனை நடைபெறும். உதாரணம: பங்கு பரிமாற்றகம். |
| 6 | இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்தளவு கொண்டது. | கடன மற்றும் சந்தை ஆபத்து அதிகளவு உள்ளது. |
| 7 | நீர்மைத்தன்மை | நீர்மைத்தன்மை கொண்டது | குறைந்தளவு நீர்மைத்தன்மை கொண்டது. |
| 8 | விலை மதிபபு தெரிந்து கொள்ளுதல் | விலை மதிப்பு குறித்த வெளிப்படைத் தன்மை எதுவுமில்லை. | விலை மதிப்பு குறிதத வெளிப்படைத் தனமை உள்ளது. |
| 9 | ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மைய வங்கி இதனை கட்டுப்படுத்துகிறது | மைய வாங்கி தவிர செபி போன்ற அமைப்பு இதனை கட்டுப்படுத்துகிறது. |
| 10 | ஒப்புறுதியளித்தல் | ஒப்புறுதியளித்தல் முதன்மைப் பணி அல்ல | ஒப்புறுதியளித்தல் முதன்மைப் பணி ஆகும். |
| 11 | ஆதிக்க நிறுவனங்கள் | வணிக வங்கிகள் | வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் தனிச் சிறப்பு நிதி நிறுவனங்கள் |

**(OR)**

b)

| வ.எண் | சிறப்பியல்புகள் | பங்கு பரிவர்த்தனை (பங்குச்சந்தை) | பண்டமாற்று பரிவர்த்தனை (பொருட்கள் பரிமாற்றகம்) |
|---|---|---|---|
| 1 | பொருள் | பங்குச்சந்தை என்பது தொழில் துறை மற்றும் நிதிப் பாதுகாப்பின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சநதை | ஒரு பண்டமாற்ற பரிமாற்றகம் என்பது பண்டமாற்ற சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படும் இடததில பொருட்களை பரிமாற்றம் செய்வதாகும். |
| 2 | பணிகள் | சந்தைப்படுததுதலை எளிதாககுகிறது. | பத்திரங்களுக்கு தேவை ஏற்படுத்துதல் அல்லது பத்திரங்களுக்கு விலைக் காப்பீடு சேவைகள் மற்றும் நீர்மைத் தன்மையை ஏற்படுத்துகிறது. |
| 3 | நோக்கம் | பொருள் மூலதன உருவாக்கம் மற்றும் மூலதன ஆதாரங்களை சிறநத முறையில் பயன்படுத்துதல் ஆகியவற்றை எளிதாக்குகிறது. | ஆபத்து குறைப்பு மூலம பொருட்கள் விற்பனையை அதிகரிக்க உதவுகிறது. |
| 4 | பங்கேற்பாளர்கள் | முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள் | தயாரிப்பாளர்கள், முகவர்கள் நிறுவனங்களின் வியாபாரிகள் மற்றும் ஊக வணிகர்கள் |
| 5 | ஒப்பந்தங்களின் காலம் | ரொக்கம், உடனடி வழங்கல் மற்றும் பதினைந்து நாட்களுக்கான ஒப்பந்த கணக்கு | எதிர்கால சந்தை ஒப்பந்தங்களுக்கான 2 அல்லது 3 மாதங்கள் கால செலுத்துகை மற்றும் உடனடி பண ஒப்பந்தங்கள். |
| 6 | ஆவண வர்த்தகம் | இங்கு பங்குகள், பத்திரங்கள், தொழில்துறை பத்திரங்கள் சந்தைப்படுத்தப்படுகிறது. | இதில் அதிகளவு வர்தததகம், விலை நிச்சயமற்ற மற்றும் கட்டுப்பாடற்ற ெ ாருடகள சந்தைப்படுத்தப்படுகின்றன. |
| 7 | ஊக வணிகம் | ஒரு பரந்த, தயாராக நீர்மை மற்றும் தொடர்ச்சியான பத்திரங்கள் விற்பனையை உறுதிப்படுத்துகின்றன. | விலை இடர்பாட்டின் ஈரப்பு உத்தேசத்தை உறுதி செய்கிறது. |
| 8 | முன் ஒப்பந்தம் | பத்திரங்கள் முழுமையாக தரநிலையாக்கப்படுவதால், இவை எளிமையாக்கப்படுகின்றன. | எதிர்கால ஒபபந்ததகை எளிதாக்குவதற்கு தரநிலை வகுப்பு ளுக்கு நியமங்கள் இருக்க ே ண்டும். |
| 9 | ஒருமுனைப் படுத்துதல் | விற்பனையாளர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பத்திரங்களை வழங்குவதற்கு ஒருமுனைப் படுத்துதல் எளிமையான ஒன்றாகும் | விற்ப னய ளர் தரமான அலலது பிறர் வழங்கக்கூடிய பொருட்கள வழங்குவதில் ஒருமுனைப்படுத்துதல் கடினமான ஒன்றாகும். |
| 10 | விலை மேற்கோள் | முன்னோக்கிய ஒபபநதஙகளைப் பொறுததவரை ஒருமுனை மேறகோள் மட்டுமே சாத்தியமாகும். | எதிர்கால ஒப்பந்தங்களுக்கான பலமுனை மேற்கோள் ச ததியமாகும். |

43) a)

அக வளங்கள்:
இடமாற்றம்
ஒரு துறையில் இருக்கும் உபரி பணியாளர்களை பற்றாக்குறை உள்ள மற்ற துறைகளுக்கு பணி மாற்றம் செய்வதன் மூலம் காலி பணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை எளிமையான வழியில் நிரப்பலாம்.
மேம்படுத்துதல்:
பணியாளர்கள் கீழ்மட்ட நிலையிலிருந்து மேலமடட நிலை நோக்கி செல்ல செயல்திறன் மதிப்பீட்டு முறை உதவுகிறது.
பதவி உயர்வு
பணிமூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில் பணிய ளரகள் நிறுவன அமைப்பின் படிநிலையில் உள்ள கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலைக்கு செனறு பணி புரிய வாய்ப்பு அளிக்கப்படுகிறது.
பதவி இறக்கம்:
பணியில் தொடர்ந்து குறைவான செய திறனை வெளிப்படுத்தும் பணியாளர், செயல்திறனின முக்கியத்துவத்தை உணரும் வகை ல் அவரை மேல்நிலை பணியிலிருந்து கீழ்நிலைபணிக்கு மாற்றிவிடுவது பதவி இறக்கம் எனப்படுகிறது
பழைய ஊழியர்களின் பரிந்துரை:
பழைய பணியாளரகளை திருப்திப்படுத்த அவர்களது உறவினர்கள் அல்லது நண்பரகளை வேலைக்கு அமர்த்தலாம்.

**(OR)**

b)

i) புதிய (LPG) யின் தாக்கததை ஒப்பந்தங்களை அறிமுகம் செய்வது.
ii) வெளிநாட்டு முதலீடுகளை கவர்ந்திழுத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியது.
iii) முற்றுமை மற்றும் வணிக தடை சட்டம் (MRTP ACT) 1969 திருத்தியமைக்கப்பட்டது.
iv கட்டுப்பாடுகளை அகற்றுதல்
v) பன்னாட்டு வணிகத்தை மேம்படுத்த உதவுதல்
vi) பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கையாள உதவுதல்
vii) வரிகளை மறுசீரமைப்பு செய்தல்
viii) உரிமம் வழங்கும் முறையை அகற்றிட வழிவகுதது கையாள உதவுதல்
1. உலகமயமாக்கல் தாராளமயமாக்கல் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றது, இக்கோட்பாடு தடையற்ற வாணிகத்தை பன்னாட்டு அளவில் உருவாக்கியது.
2. இதன் மூலம் பல நாடுகளின பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான தடைகள் உடைத்தெறியப்படடன.
3. மேலும் இந்திய பொருளாதாரத்தை உலக நாடுகள் மதிக்கத்தக்க அளவிற்கு வளர்ச்சியடையச செய்துள்ளது.

44) a)

**1. பொருள்:**
i. பொருள் சந்தையில் ஒரு முக்கிய கூறு ஆகும்.
ii. பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது.
iii. பொருள் முக்கிய இடம் பெறுகிறது.
**2 விலை:**
i பிலிப் கோட்லர் அவர்களின் கூற்றுப்படி, "விலை என்பது பண்டங்கள மற்றும் பணிகள் மாற்று மதிப்பு ஆக பெறபபடும் ஒன்றாகும்".
ii. நுகர்வோர்கள் நலன் கருதி பண்டங்கள் மற்றும் பணிகளுககு இணையான மதிப்பை மாற்றிக் கொள்ள தக்க ஒன்றுதான் விலை.
**3. இடம்:**
i. உற்பத்தி இடத்திலிருந்து நுகர்வு இடம வரை பொருட்களை சரியான முறையில் மற்றும் சரியான நேரததில கொண்டு செல்லவில்லை எனில் அனைததும பயனற்றதாகும்.
ii. சரியான நேரத்தில் சரியான இடத்திறகு கொண்டு செல்வதற்கு இடம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.
**4. விற்பனை மேம்பாடு**
i. சந்தையில் ஒரு பொருள் என்னதான் தரமுடையதாக இருந்தாலும், மேலும் விலையில சாதக நிலை இருந்தாலும் நுகரவோர் மத்தியில் பொருளின் சிறப்பியல்புகள் மற்றும் பயன்பாடு குறித்து தெரியப்படுத்தாத நிலையில் அப்பொருள் நிர்ணயித்த வெற்றியை ஒருபோதும் அடைய இயலாது.
ii. எனவே மேம்பாடு நடவடிக்கைகள் மிகவும் அவசியமான ஒன்று.
iii. மேம்பாடு நடவடிக்கையில் விளம்பரம் அதிக பங்கு வகிக்கிறது.

**(OR)**

b)
1. நிதிப்பிரச்சனை:
(i) மகளிர் தொழில் முனைவோர் தங்களின் சொநத சேமிப்பையோ அல்லது தெரிந்த நப ்களிடமோ பணத்தை பெற்று தனது நிதி தேவையை பூர்த்தி செய்ய வேண்டியுளளது.
(ii) இதன் மூலம் மகளிர் தொழில் முனைவோர் தான் மேற்கொண்டுள்ள தொழிலை போதிய அளவில் விரிவாக்கம் செய்ய இயலாமல் தவிக்கின்றனர்.
2. இயக்கத்தடை:
(i) மகளிர் தொழில் முனைவோர் தனது தொழிலையும் கவனித்துக் கொண்டு வீட்டு பொறுபபுகளையும் சுமகக வேண்டியுள்ளது.
(ii) தொழிலை துவங்கிய பின் பல்வேறு காரணங்களுக்காக மகளிர் வெளியே செலல முடிவதிலலை.
(iii) இதனால் பிறரிடம் அவரின் பயண வேலைகளை ஒப்படைக்க வேண்டியுள்ளது.
3.கல்வியறிவு இல்ல மை:
(i) ஏட்டறிவு இல்லாத அலலது குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர் வியாபாரம் அல்லது தொழில் தொடர்பான கருத்துக்களை முழுமையாக புரிந்து கொள்ள முடியாதவராக உள்ளனர்.
4. ஆதரவு இன்மை:
(i) மகளிர் தொழில் முனைவோர் செம்மையாக தன் வினையை செயல்படுத்த பலதரப்பட்ட மக்களின் கனிவு, பரிவு மற்றும் ஆதரவு தேவை.
(ii) குறிப்பாக ஆண் ஆதிக்க மனப்பான்மை கொண்ட நபர்களின் ந த்தை மறறும் வார்த்தை வன்முறைகள் மகளிரின் தொழில் துணிவை மிகவும் பாதிக்கிறது.
5. கடும் போட்டி:
(i) போட்டியை வலுவாக எதிர்கொள்ள, விளம்பர மற்றும் விற்பனை பருகக யுக்திகளை கையாள வேண்டியுள்ள சூழ்நிலையில், போதிய நிதி ஆதாரம் இல்லாமல் மகளி தொழில் முனைவோர்கள் திணறுகின்றனர.
6. உணர்ச்சி வசப்படல்:
(i) மகளிர் இயற்கையாகவே உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள்
(ii) உணர்ச்சி அதிகமாகும் பொழுது கோபபபடுபர்கள்.
(iii) இப்படிப்பட்ட மனநிலையில் தொழிலில் சிக்கல் ஏற்படும் பொழுது நிதானமாக முடிவெடுக்க முடிவதில்லை.
7. போதிய விவரமின்மை:
(i) மகளின் தொழில் முனைவோர் தங்களின் குறைந்த படிபபுததகுதி, அலட்சியம் மற்றும் வீட்டு வேலை சுமையின் காரணமாக, பலதரப்பட்ட வழிகளில் வரும செய்திகளை உள்வாங்க இயலாதவர்களாக இருக்கின்றார்கள்.
8. சார்ந்து வாழும் கலாச்சாரம்:
(i) பல சமயங்களில் மகளிர் தன் வாழ்நாள் முழுவதும பிறரை சார்ந்து வாழ்கின்றனர்.
(ii) இதனால் தன்னிசையாக முடிவுகளை எடுக்க முடியாமல் பிறரைச் சார்ந்து உள்ளனர்.
(iii) இப்படிப்பட்ட காலாச்சார தடை மகளிர் தொழில் முனைவோர் தன்னுடைய விருப்பப்படி தொழில் துவங்கி அதனை நிர்வகிக்க அனுமதிப்பதில்லை.

45) a)

அதிக விலை :
(i) பல்வேறு கட்டாயத்தின் மூலம் விற்பனையாளர்கள் பொருட்களின் நியாயமான விலையைக் காட்டிலும் அதிகமான விலைக்கு பொருட்களை விற்கின்றனர்.
(ii) பொருட்களை பதுக்கி வைப்பதன் மூலம் செயற்கையான பற்றாக்குறையை ஏற்படுத்தி கொள்ளை இலாபம் ஈட்டும் நோக்கில் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்கின்றனர்.
(ii ) இதனமூலம் நுகர்வோர்கள் அதிக விலை கொடுத்து கள்ளசநதையில பொருட்களை வாங்கும் நிலைக்கு தளளபபடுகிறாரகள்.
2. கலப்படம்
(i) உணவுப்பொருட்களில் அதே மாதிரியான பதிலீட்டு பொருளை சேர்ப்பது கலப்படம் ஆகும். (உதாரணம்) மிளகாய் வத்தல் பொடியில் செங்கல் தூளை சேரப்பது.
(ii) கொள்ளை இலாபம் ஈட்ட வேண்டும் எனற நோக்கில் வணிகர் கலப்படமான பொருளை விற்பனை செயது அதிக இலாபம் ஈட்டுகிறார்.
(iii) இவ்வாறு கலப்பட பொருடகளை வாங்கி நகரும் நுகர்வோர்கள் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிப்படைகிறார்கள்
3. போலியான பொருடகள
(i) மக்கள் மத்தியில் பிரபலமடைந்த வணிகக்குறிகள் கொண்ட போலியான பொருடகள உற்பத்தி செய்யப்பட்டு சநதையில் விற்பனை செய்யப்படுகின்றன. (எ.கா) வானொலி, வாகன உதிரிபாகம், ஆடைகள் மற்றும் பேனாக்கள்.
(ii) எனவே தரம் குறைந்த பொருளை கூட அசல் பொருளுக்கான விலையை கொடுத்து நுகர்வோர்கள் வாங்கி ஏமாறுகிறார்கள்.
4. செயற்கையான பற்றாக்குறை
(i) ஒரு சில சூழலில் வணிகர்கள் தங்களிடம் அதிகளவு இருப்பு இருப்பினும் இல்லை எனக் கூறி செயற்கை தேவையை உருவாக்குகிறார்கள்.
( i) நுகர்வோர்கள் தங்களின் தவிர்க்க இயலாத தேவையின் காரணமாக அதிக விலை கொடுத்து பொருட்களை வாங்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.
(iii) இதன் மூலம் நுகர்வோர்கள் சுரண்டப்பட்டு வண கர்கள கொள்ளை இலாபம் ஈட்டுகிறார்கள்.
5. தரக்குறைவு :
(i) ஒரு சில பொருட்கள் கட்டுமம் செய்யப்படடு முத்திரையிடப்பட்டினும் அதனுள குறைவான எடை தரம மற்றும் கெட்டுபோன பொருட்களே உள்ளன.
(ii) அந்த பொருளை மாற்ற முற்படும் பொழுது நுகர்வோரின் கவனக்குறைவாலே ஏற்ப ்டுள்ளது என்று வணிகர்கள் நுகர்வோர் மீது குற்றம் சாட்டுகின்றனர்.
(iii) மேலும் ஒரு சில வணிகரகள நுகர்வோருக்கு இரசீது தராமலும், இரசீதில் விறற பொருடகள் திரும்ப பெறப்படாது என்று அச்சிட்டு நுகர்வோர்களை சட்டப்படியே ஏமாற்றுகிறார்கள
6. இடர்பாடு கொணட பொருட்கள் :
(i) தயாரிப்பாளர்கள் தங்களின் பொருட்களை பயன்படுத்தும் விதம் மற்றும முன்னெச்சரிக்கை நடவடிக்கை பற்றி நுகர்வோருக்கு நடவடிக்கை பற்றி நுகர்வோருக்கு மாதிரி விளக்க அளிக்க வேண்டும்.
(ii) அவ்வாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை இல்லாமல் பொருட்களை கையாளும் பொழுது நுகர்வோர்கள் பாதிப்படைகிறார்கள்.
7. உத்திரவாதம் மற்றும் சேவைகள் :
(i) ஒரு சில குறிப்பிட்ட ஆடம்பர பொருளுக்கு உத்திரவாதம் அளித்து குறிப்பிட்ட காலம் வரை இலவச சேவை வழங்குவதாக விற்பனையாளர் உறுதியளிக்கிறார்.
(எ.கா:தொலைக்காட்சி)
(ii) மேலும் அந்த உத்திரவாதமானது எளிதில் உடையாது என கருதும உதிரிபாகங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு மற்ற உதிரிபாகங்களுக்கு வழங்கப்படுவதில்லை.
(iii) உத்திரவாதம் அளித்த உதிரிபாகங்களுக்கு கூட நுகர்வோரின் கவனக்குறைவால் பழுது ஏற்பட்டது. எனக் கூறி இலவச சேவையை அளிக்க மறுக்கின்றனர்.
8. தகுதியற்ற பொருட்கள் :
(i) மனித நுகர்வோருக்கு தகுதியற்ற பொருட்கள் சந்தையில விற்பனை செய்யப்படுகின்றது.
(ii) உடையாது என்று சான்றளிக்கப்பட்ட பொருட்கள் உபயோகப படுத்தும்போது உடைந்து விடுகின்றது.
(iii) இது போன்ற காரணங்களால் நுகர்வோர் பாதிபபடைகிறார்கள்.
9. பொய் விளம்பரங்கள் :
(i) விளம்பரங்களில் பொருள் குறித்த தகவல்கள் மிகச்சிறிய அளவிலே வெளிப்படுத்தப்படுகின்றது.
(ii) விளம்பரங்கள் பொருளின் தரம், விலை, உள்ளடககம் பயன்பாடு, உத்திரவாதம், செயல்திறன் குறித்த தவறான கருத்துக்களை பரப்புகின்றன.
(iii) இவ்வகையான பொய் விளம்பரங்களை நம்பி பொருட்களை வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

**(OR)**

b

1. உற்பத்தி தொழில் முனைவோர் :
பெரிய அல்லது சிறிய அளவிலான தொழிலை ஏற்படுததி தன் எண்ணத்தில் உதித்த பொருளை (அ) சேவையை தயாரித்து சந்தை இடுபவர்.
2. வணிகத் தொழில் முனைவோர் :
(i) பொருளை வாங்கி விற்கும் செயலில மட்டும தன்னை உட்படுத்தி கொள்பவர்.
(ii) உள்நாட்டிலோ, வெளிநாட்டிலே பொருளை வணிகம் செய்பவர்.
(iii) இவர்கள் தங்கள் தொழிலில் கழிவு முறையில் இலாபம் ஈட்டுகின்றனர்.
3. தொழிற்சாலை தொழில் முனைவோர் :
(i) வாடிக்கையாளரகளின தேவைகளை துல்லியமாக கண்டறிந்து அவற்றிக்கேற்ப ெ ாருடகளை உற்பத்தி செய்பவர்.
(ii) இவர்கள் சிறு, நடுத்தர அலலது பெருந்தொழில் முனைவோராக இருக்கலாம.
(iii) உற்பத்தி பொருளுக்கு பலவிதத்தில் மதிப்பேற்றி சந்தையிடுகின்றனர்.
4. கூட்டு பங்கு தொழில் முனைவோர் :
(i) நிறுமச் சட்டம் 2013ன் படி அதிலுள்ள சடங்கு முறைகளை பூர்த்தி செய்து நிறுமத்தை பதிவு செய்கிறார்.
(ii) இயக்குநரவை மற்றும விளைவித்து அதை நேரடியாகவோ அல்லது கூட்டுறவு அமைப்புகள் மூலமாகவோ சந்தையிடும் தொழிலை மேறகோள்பவர்.
5. வேளாண் தொழில் முனைவோர் :
வேளாண் பொருட்களை விளைவித்து அதை நேரடியாகவோ அலலது கூட்டுறவு அமைப்புகள் மூலமாகவோ சந்தையிடும் தொழிலை மேற்கொள்பவர்.
6. சில்லறை தொழில் முனைவோர் :
சிறு அளவில் பொருட்களை மொத்த விய பாரிடம் இருந்து பெற்று (பலரதரப்பட்ட பொருட்கள்) இறுதி நுகர்வோருக்கு பொருளை விற்பவர்
7. சேவை தொழில் முனைவோர :
வங்கியில்,காப்பீடு, நிதிசார் பொருடகள, பழுதுநீக்கம், ஆலோசனை, போக்குவரத்து விளம்பரம, மனித அளிப்பு போன்ற தொழிலகளை துவங்கி நடத்துபவர்.

46) a)

பணிகள் :
1. மாநில ஆணையம் மாநில அளவில் செயல்பட்டு வருகிறது.
2. இந்த அமைப்பு நுகர்வோர் குறைபாட்டு தீர்ப்பாணையம் என அழைக்கப்படுகிறது.
3. சரக்கு மற்றும் சேவைகள் தொடர்பாக எழும் புகார்கள் இந்த தீர்ப்பாணையத்தின் செயல் பாட்டு எல்லைக்குள் அடங்கும்.
4. இது வாணிக நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு ஆணையம என்ற பெயரில் துவங்கப்பட்டு வெற்றிகரமாக செயலபட்டு வருகிறது.
உறுப்பினர்கள் :
1. தலைவர் - உய்ரநீதிமன்ற நீதிபதி (சம்மந்தப்பட்ட மாநில அரசால் பதவி அமர்த்தப்பட்டவர்)
2. நீதி, நேர்மை, நாணயம் மற்றும் போதிய துறைகளில ஏற்படும்.சிக்கல்களை கையாளும் திறன் கொண்டவர்களை உறுப்பினர்களாக நியமிக்கலாம்.
அதிகார எல்லை :
1. 20 இலட்சத்திற்கு அதிகமாக 1 கோடிக்குள்ளாக விற்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவை தொடர்பாக எழும் குறைகளை (மனுக்களை) விசாரிக்கும் அதிகாரம் உண்டு.
அதிகாரம்
1. இம்மன்றம் விசாரிதத புகார்கள் அல்லது இதனிடம் விசாரணையில் உள்ள புகாரகளுக்கான ஆவணங்களை கேட்டு பெற்று ஆழ்ந்த விசாரணை செய்து தீர்ப்பு வாங்கும் அதிகாரம்.
2. இம்மன்றம் கணக்கேடுகள் மற்றும் பொருட்களை தன்வச வைத்துக் கொள்ளவும் அல்லது குறைதீர்ப்பு ஆணையத்தில் பணிபுரியும் அலுவலர்கள் பார்வைக்கோ அல்லது ஆய்வுக்கோ வழங்க அதிகாரம் பெற்றுள்ளது.
3. மேற்கூறிய ஆணையத்தின் அதிகாரிகளுக்கு சட்டத்தின் நோக்கத்திற்காக தேவைப்படும் தகவல்களை வழங்கும் அதிகாரம்.

**(OR)**

b)
1. நிறுமச் சட்டம் 2013 இல் இயக்குனர்களின் தகுதிகள் குறித்து எதுவும் சொல்லப்படவிலலை.
2. பொதுவாக ஒரு இயக்குனர் நிதி, சட்டம், மேலாண்மை, விற்பனை சந்தைப்படுத்துதல் நிர்வாகம்,ஆராய்ச்சி, பெரு நிறும ஆளுமை, தொழிநுட்ப செயல்பாடுகள் அல்லது நிறுமத்தின் வணிக தொ பான பிற துறைகளில் பொருத்தமான திறன்கள் மற்றும் அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.
3. இயக்குனர் பற்றிய பல்வேறு விதமான தொகுப்புகளின்படி அவருக்கு உரிய தகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
(i) சரியான மனநிலை உடையவர்.
(ii) செயல்முறை விதிகளில் குறிப்பிட்டுள்ள பங்குகளை வைத்திருப்பவர்.
(iii) தனி நபராக இருக்க வேண்டும்.
(iv) நல்ல நிதிநிலை உடையவராக இருக்க வேண்டும்.
(v) நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டு தண்டனை பெறாதவராக இருக்க வேண்டும்.

47) a)

| | வேறுபடுத்தும் கூறுகள் | நிபந்தனைகள் | நம்புறுதிகள் |
|---|---|---|---|
| 1 | பொருள் | ஒப்பந்தத்தின் கருப்பொருளாக திகழ்வது | ஒப்பநதத்திற்கு துணையாக இருக்கிறது. |
| 2 | முக்கியத்துவம் | நிபந்தனையை மீறுவது ஒப்பந்தத்தை மீறுவதா கொள்ளப்படுகிறது. | நமபுறுதியை மீறுவது ஒப்பந்தத்தினை மீறுவதற்கு ஒப்பாகாது. |
| 3 | உரிமை மாற்றம் | நிபந்தனைகளை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழ முடியாது | நம்புறுதியை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழ முடியும். |
| 4 | பரிகாரம் / தீர்வு | நிபந்தனையை மீறுவதனால ஒபபந்தத்தில பாதிக்கப்பட்ட நபர் ஒப்பநதத்தை நீக்கிக் கொள்வதுடன் ந ட ஈடு கோரும் உரிமையை பெறுகிறார. | நம்புறுதியை மீறுவதனால் ஒப்பநதத்தில பாதிக்கப்பட்டவர் நட்ட ஈடு கேடகும் உரிமையை மட்டுமே பெற்றுள்ளார். |

**(OR)**

b)
**I. திறந்த நடைமுறை:**
ஒரு உறுப்பினர் யாருக்கு வாக்களிக்கிறார் என மற்றவருககு தெரியும் வகையில் வாக்களிப்பு நடைபெறும்.
**i) சத்தத்தின் வாயிலாக வாக்கெடுப்பு:**
பொதுவான முடிவுகள் எடுக்கப்படும் பொழுது தனது கருத்தை தெரிவிக்கும் வகையில் கைகளை தட்டியோ அல்லது மேசையை தட்டியோ தனது ஆதரவை தெரியபப்படுத்துமாறு வாக்கெடுப்பு நடைபெறும்.
**ii) குரல வாக்கெடுப்பு:**
ஒரு முடிவை முன்மொழிந்து அதற்கு ஆதரவாக உளளவர் 'ஆம் என்றும் எதிராக உள்ளவர் 'இல்லை' என்றும் கூறச் சொல்லி வாக்கெடுப்பு நடைபெறும்.
**iii) கைகளை உயர்த்துவதன் மூலம் வாக்கெடுப்பு:**
ஒரு முடிவை முன்மொழிந்து அதற்கு ஆதரவாக மறறும எதிராக உள்ளவர்களை கைகளை உயர்த்த சொல்லி வாக்கெடுப்பு நடத்துவது.
**II. இரகசிய வாக்கு முறை:**
ஒரு உறுப்பினர் அளிக்கும் வாககு மறறவரகளுக்கு தெரியாதவாறு வாக்கெடுப்பு நடத்துவது.
**i) வாக்குச் சீட்டு முறை :**
இம்முறையில் வரிசை எண் இடபபட்ட வாக்கு சீட்டுகள் மூலம் வாக்குகள் பதிவு செய்யப்படும்
**ii) அஞ்சல் வாக்கு**
(I) பெரிய நிறுவனஙகளின் உறுபினர்கள் பல்வேறு நாடு கடந்து இருப்பார்கள்
(ii) வாக்களிக்க நேரில் வர இயலாததால் அஞ்சல் மூலமாக தனது வாக்குகளை பதிவு செய்வர்.
**III. இயந்திர வாக்குப்பதிவு:**
(i) இது ஒரு அதிநவீன முறையாகும்.
(ii) வாக்குச் சீட்டுகளுக்கு பதிலாக மின்னணு இயந்திரங்கள் மூலம் வாக்குகள் பதிவு செய்யப்படும்.
(iii) பச்சை நிற விளக்கு எறிந்தால் சாதகமாக வாக்கு பதியப்படுகிறது என பொருள்.
(iv) சிவப்பு நிற விளக்கு எறிந்தால் பாதகமாக வாக்கு பதியப்படுகிறது என பொருள்.